**17.03.2023.**

**O.S. No.158/2021**

**DW.1 ஜெயகுமார்**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகின்றார்.**

3, 4 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என 3, 4 எதிர்வாதிகள் தரப்பில் முன்னிலையாகும் வழக்கறிஞர்கள் தெரிவிக்கிறார்கள்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1ஆம் எதிர்வாதி லட்சுமி என் தாயார் ஆவார். வாதி சித்ராவும், 3ஆம் எதிர்வாதி சுதாவும் என் சகோதரிகள் ஆவார்கள். இவ்வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்போதே, Ex.B7 (13.08.1990 தேதிய தானசெட்டில்மன்ட் ஆவணம்) மற்றும் 26.03.2015 தேதியில் A.G. ராமன் எழுதி கொடுத்ததாக சொல்லும் சாட்டுதலுக்குரிய உயிலாவணம் என் கைவசம் இருந்ததா என்றால், ஆம் என் கைவசம் இருந்தது. அந்த ஆவணங்களை எனது எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். Ex.B7 ஆவணமும், 26.03.2015 தேதியிட்ட கேள்விக்குரிய உயிலாவணமும் உண்மையான ஆவணம் அல்ல என்பதால்தான் அவற்றை எதிர்வழக்குரையோடு தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல.

என் தாத்தா பெயர் கோவிந்தசெட்டி ஆகும். Ex.B5. Ex.B6 ஆகிய ஆவணங்களில் அல்லாலி என்ற கோவிந்தசெட்டியின் மனைவி தாதியம்மாள் என்றவாறு எதுவும் காணப்படவில்லை என்றால், அதுபற்றி நான் பார்க்கவில்லை. 26.03.2015 தேதியில் என் தகப்பனார் நான் சொல்வதுபோல் ஒரு உயிலாவணத்தை எழுதி கொடுக்கவே இல்லை என்றால், சரியல்ல. 26.03.2015 தேதிக்கு பின்னிட்டும் A.G. ராமன் சொத்துக்களை விற்பனை செய்துள்ளார் என்றாலும், 3ஆம் எதிர்வாதிக்கு தானசெட்டில்மன்ட் ஆவணமும் எழுதி வைத்துள்ளார் என்றால், சரியல்ல. 2002ஆம் வருடத்தில் 3ஆம் எதிர்வாதிக்கு தானசெட்டில்மன்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார். என் தந்தையார் உயிருடன் இருக்கும்போதே 26.03.2015 தேதிக்கு பின்னிட்டு நான் சொல்லும் உயிலாவணத்தில் கண்ட சொத்துக்களில் சிலவற்றை விற்பனை செய்துள்ளார். உயிலாவண சங்கதிகளை படித்து பார்த்துள்ளேனா என்றால், ஆம் படித்து பார்த்துள்ளேன்.

1ஆம் எதிர்வாதியான என் தாயாருக்கு சொந்தமான சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால், சரிதான். என் தாயாருக்கு தனிப்பட்ட வருமானம் ஏதும் இல்லை என்றால், சரிதான். வீட்டோடுதான் இருந்து வந்தார். நான் சொல்லும் 26.03.2015 தேதிய உயிலாவணத்தில் என் தாயார் லட்சுமிக்கு ஆதரவாக எந்த சங்கதியும் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். அந்த உயிலாவணத்தில் வாதி சித்ராவை பொறுத்தும் எந்த சங்கதியும் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். ஆனால் நகைநட்டுக்கள், சீர்வரிசைகளை சித்ராவிற்கு செய்துள்ளோம். வாதி சித்ராவிற்கு நகைநட்டுக்கள், சீர்வரிசைகள் செய்ததாக நான் தற்போது சொல்லும் சங்கதிகளை எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால், சரிதான். அதை எதிர்வழக்குரை தயாரிக்கும்போது எதிர்பார்க்கவில்லை.

என் தந்தையார் என் தாயார் பெயரிலும், என் சகோதரிகள் பெயரிலும் அன்பாகவும், பாசமாகவும் இருந்து வந்தார் என்றால், சரிதான். அவர்களை காட்டிலும் என்னோடு மேலும் அதிகமான அன்போடும், பாசத்தோடும் இருந்துவந்தார். என் பேரில் அதிகமான அன்போடும், பாசத்தோடும் என் தந்தையார் இருந்து வந்ததாக உயிலாவணத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். நான் சொல்லும் 26.03.2015 தேதியிட்ட உயிலாவணத்தை என் தகப்பனார் எழுதி கொடுக்கவில்லை என்றால், சரியல்ல. அதில் கண்ட சொத்துக்களை என் தகப்பனார் விற்பனை செய்ததில் இருந்தே, அந்த உயில் சாசனம் நடைமுறைக்கு வரவில்லை என்றால், சரியல்ல.

நான் அடமானம் வைத்து கடன் வாங்கியதாக சொல்லும் சங்கதிகளை பொறுத்து என் சகோதரிகளுக்கு தெரியாது என்றால், சரியல்ல. என் சகோதரிகளுக்கு தெரிந்திருந்தும், அவர்கள் மறைக்கிறார்கள். நான் அடமான கடன் வாங்கும் சங்கதி பற்றி வாதிக்கு தகவல் ஏதேனும் கொடுத்தேனா என்றால், கொடுக்கவில்லை. கொடுக்கல், வாங்கல் சங்கதிகளை நான் வாதியிடம் சொல்லவில்லை. பட்டா மாறுதல் செய்வதற்கு முன்பாக வாதிக்கும், 3ஆம் எதிர்வாதிக்கும் தகவல் கொடுத்தேனா என்றால், நான் தகவல் கொடுக்கவில்லை. ஆனால், அந்த விவரம் வாதிக்கும், 3ஆம் எதிர்வாதிக்கும் தெரியும். என் பெயரில் பட்டா மாறுதல் உத்திரவு பிறப்பித்த அதிகாரிகளும் வாதிக்கும், 3ஆம் எதிர்வாதிக்கும் பட்டா மாறுதல் மனு குறித்து எவ்வித அறிவிப்பும், தகவலும் கொடுக்கவில்லை

என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. என் பெயரில் பட்டா மாறுதல் செய்ததற்கு உத்திரவு பிறப்பித்தார்களா என்றால், அந்த விவரம் எனக்கு தெரியவில்லை. இணையவழியில் பட்டா மாறுதல் செய்ததால், என்னிடம் உத்திரவு நகல் எதுவும் வழங்கவில்லை. என் தகப்பனாரின் வாரிசு சான்று எதுவும் என் பட்டா மாறுதல் செய்வதற்கு நான் சமர்ப்பிக்கவில்லை என்றால், சரியல்ல. சமர்பித்துள்ளேன். என் கைவசம் என் தந்தையாரின் வாரிசு சான்றிதழ் உள்ளதா என்றால், என்கைவசம் உள்ளது. எனது வழக்கறிஞர் இவ்வழக்கிற்கு தேவை என கேட்கவில்லை. ஆதலால், எனது வழக்கறிஞரிடம் நான் கொடுக்கவில்லை.

Ex.B7 தானசெட்டில்மன்ட் ஆவணம் பொய்யானது என்றால், சரியல்ல. 26.03.2015 தேதியில் என் தகப்பனார் உயில் எழுதி கொடுத்ததாக நான் சொல்வதும் பொய்யான ஆவணம் என்றால், சரியல்ல. வழக்கு சொத்துக்கள் அனைத்திலும், வாதியும், 1 முதல் 3 எதிர்வாதிகளும் கூட்டு உடமையில், அனுபவித்தில், அனுபவித்து வருகிறோம் என்றால், சரியல்ல. என்னுடைய அனுபவித்தில் மட்டுமே வழக்கு சொத்துக்கள் உள்ளது.

வழக்கு சொத்துக்களில் வாதிக்கு 5/16 பங்கு உரிமையும், நலனும் உள்ளது என்றால், சரியல்ல. வாதிக்கு வழக்கு சொத்தில் உள்ள பாகத்தை நான் பிரித்து கொடுக்காததால், வாதிக்கு இவ்வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்றால், சரியல்ல. வாதி கோரியபடி தீர்ப்பும், தீர்ப்பாணையும் வழங்க வேண்டும் என்றால், சரியல்ல. இவ்வழக்கில் ஏற்பட்டுள்ள செலவு தொகையை நான் வாதிக்கு கொடுக்க கடமை பட்டவர் என்றால், சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை.

R SAKTHIVEL

Principal District Judge
Digitally signed by R SAKTHIVEL
Location: Krishnagiri